டியனை நெஞ்சாரத் தழுவிக் கொள்ளத்தான் நேரம் வர வில்லை! கொஞ்சம் நேரமாவது அவன் கொள்ளையழகை விழிகளால் பருகி, கற்பனையூருக்குள் நுழைந்து கலவி சுகம் காணலாம் என நினைத்தால், இமைப் பொழுதில் அவன் இவளது இல்லத்தைக் கடந்துவிட்டான். அவன் போனது கண்டு பொறுமிய தலைவி மனம் பொங்கி எழுகின்றது. 'நீயும் ஓர் பெண்தானா?' என்று ஏசுகிறாள்.... யாரை...?

வேறொன்றுமில்லை. அன்று பாண்டியனைச் சுமந்து சென்றது அவன் பட்டத்து ஆனை. அது ஆணல்ல, பெண் ஆனை. "பெண்ணாய்ப் பிறவி எடுத்திருந்தும் என் கண் பட்ட பாட்டைக் கவனியாமல், விரைந்து நடந்து சென்று புண் பட்ட பாவையாய் ஆக்கிவிட்டாயே என்னை? சற்று மெதுவாக நீ நடந்திருந்தால், என் தலைவனின் மேனியழகை முழுவதுமாய் வாரி விழுங்கியிருப்பேனே?" என்று புலம்பு கின்றாள் காதலி. இதனால் ஆனையின் 'பெண்மை' மீதே ஐயம் பிறந்துவிடுகிறது அவளுக்கு! **'மாறன் உலா அங்கால் பைய நடக்கவும் தேற்றாயால் நின் பெண்மை ஐயப்படுவ துடைத்து'** என்று அவள் அரற்றுவதைக் கேட்கும்போது, நமக்கே வழுவூர் 'களிறுரித்த கடவுள்' போல் ஆகிவிடலாமா என்று தோன்றுகிறதன்றோ?

## துறவி உவந்த பேரழகு!

தன் உடன் பிறப்புக்காக அரச வாழ்வை விட்டுத் துறவறம் பூண்டவர் இளங்கோவடிகள். பாரதி முக்கண்களாகப் போற் றிய புலவரிலே இவரும் ஒருவர். இல்லறம் விடுத்த அந்த இன் பத் தமிழ்ப் புலவன் பாடிய சிலப்பதிகாரம், 'நெஞ்சை அள் ளும்' தன்மை உடையது. அதில் வஞ்சிக் காண்டத்தில், வரந் தரு காதையில் இடம் பெறும் சில வரிகளைக் காண்போம்.

இதில் கவனம் சிதறாமல் கவனிக்க வேண்டிய விஷயம், துறவியான இளங்கோவடிகள், துறவறம் ஏற்கப் போகும் மணிமேகலையின் எழிலை, 'தேவந்தி' வாயிலாக வாரி, வாரிப் பொழிகின்றார். அந்த ஓவிய வரிகளில், "மணிமே கலையின் கூந்தல் ஐந்து வகையாகப் பகுக்கும் வண்ணம் அடர்த்தியானது! அவள் விழிக்கடையிலே செவ்வரி படர்ந் திருக்கும்! கண்டோரைக் கவரும் அந்தக் கண்களின் அழகை ஏனோ அவள் மட்டும் அறியாத பேதையாய் இருக்கின்றாள்! அவளது வாயோ பவளத்திலே பதித்த முத்துக் கோவை போன்ற ஒளி வீசும் பற்களை உடையது! அவளது முலை கள் அடி பரந்து எழுந்து, ஒன்றையொன்று நெருக்கித் தள் ளிக் கொண்டு நிற்பன! நெருக்கடி உண்டாகும் அளவுக்கு நிமிர்ந்து நிற்கத் தெரியாத தோள்களா அவளிடம் இருக் கின்றன? இல்லையில்லை! தழுவி மகிழும் வண்ணம் அகன்ற மார்பினை உடைய அழகி அவள்! அக்குமரியின் உடலில் சிறியதொன்று உண்டெனில் அஃதவள் இடையழகு மட் டுமே! இடைதான் சிறுத்தது! அல்குல் பகுதியோ அகன் றது... **'தளிரிடை நுணுகலும், தகை அல்குல் பரந்தது...'** திரட்சி மிக்க தொடைகளைப் பெற்றுள்ளாள்! இத்தனைப் பாரத்தையும் எப்படித்தான் தாங்குமோ தெரியவில்லை.... நெய்யில் தோய்த்த தளிரினைப் போன்ற பாதங்களைத்தான் கொண்டிருக்கிறாள்" என்று இளங்கோவடிகள் வர்ணிப் பதை வாசிக்கும்போது, 'இப்பேரழகி துறவியாகத்தான் தீர வேண்டுமா?' என்று துடிக்கவில்லையா நமது மனது? அந்தத் துயரமும் அங்கே நிகழ்ந்ததாக அடிகளார் பாடுகின்றார்.

மணிமேகலை துறவியாக ஆனபின், **'ஆங்கது கேட்ட அர சனும், நகரமும் ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்த்தோர் தம்மில் துன்பம் தாம் நனி எய்த...'** என்றாகினராம். இரவி யையும் ஏங்க வைக்கும் எழிலுடைய மணிமேகலை துறவி யான பின் சேரன் செங்குட்டுவனும், நகர மக்களும், 'உயர்ந்த மாணிக்கத்தைக் கடலிலிட்டுத் தொலைத்தவர்' போன்ற துன்பத்தை அடைந்தார்களாம்.

ஆகா! முற்றிலுமாகப் பற்றை ஒழித்தவர்களைக்கூட சிற் றிடை பற்றியும், செவ்வாய் பற்றியும், புற்றரவல்குல் புனம யில் பற்றியும், பொங்கியெழுந்திடு முலைகள் பற்றியும் எழு தத் தூண்டுகின்ற கவர்ச்சிப் பெட்டகமல்லவா நம் கன்னித் தமிழ்?

முத்தமிழின் செம்மையைக் காட்ட, சிற்சில உதாரணங்க ளையே இங்கு உளமுவந்து சமர்ப்பித்தோம். இன்னும் எத்த னையெத்தனை இன்பங்களுண்டு எம் தமிழில்? விவரித்துக் கொண்டே போனால் இப்பூதலத்தை ஏடாக்கி, ஏற்கெனவே ஒற்றைக் கொம்புடைய ஓங்கார கணபதியின் மற்றொரு கொம்பையும் பயன்படுத்தி எழுத வைத்தாலும் மாளாது நீளுமல்லவா? விண்ணைத் தொடும் கோபுரங்களால் மட்டு மல்ல, நெஞ்சைத் தொடும் காவியங்களாலும் கவர்ந்திழுக் கும் பெருமை தமிழ் மண்ணுக்கும், தமிழுக்கும் உண்டென் பதை அகில உலகமும் அறியுமே!

கட்டுரையை நிறைவு செய்யும் முன் ஓர் கருத்து. மணிமேக லையின் துறவறத்தோடுதான் இதனை முடித்தோம். "அவள் தன் துறவைப் பற்றி என்னிடம் அறிவித்தாள்" என்று சிலப் பதிகாரத்தில் எடுத்துச் சொல்பவர், 'அறவண அடிகள்' என் னும் பெரியார். அதைப் பற்றி குறிப்பிடும் இளங்கோவடிகள், **'செம்மொழி மாதவர் சேயிழை நங்கை தன் துறவு எமக் குச் சாற்றினள்'** என்று கூறுவதாகப் பாடியுள்ளார். இதற்கு, 'மெய்ப் பொருளையே எப்போதும் உரைக்கும் பெரும் தவத் தினை உடையவராகிய (அறவண அடிகள்), 'தான் துறவறம் ஏற்றதை மணிமேகலை எனக்கு அறிவித்தாள்' எனப் பகன் றார்" என்பதே பொருளாகும்.

இக்காவியத்தைப் பாடிய இளங்கோவடிகள், பாட்டுடைத் தலைவனாகிய கோவலன், கண்ணகி உள்ளிட்ட அனைத்துக் காவிய நாயகர்களுமே தமிழர்கள்தாம். அடிகளார் இங்கே, 'மெய்ப்பொருள் உரைப்போர்' என்னும் அர்த்தத்தில் 'செம் மொழி மாதவர்' எனப் பாடியிருப்பினும், நடுவணரசு அறி விக்கும் முன்னரே (துறவியாய் இருப்பினும்) நற்றமிழ் அர சாக விளங்கிய இளங்கோவடிகள், நந்தமிழுக்கு 'செம் மொழி' என்ற அடையாளத்தை, எத்தனையோ நூற்றாண்டு களுக்கு முன்னர் வழங்கினார் என்று தமிழர்களாகிய நாம் பெருமையுற்றால் அதிலேதும் பிழையில்லையே?

அந்தச் செம்மொழியைக் கொண்டாட 'மாநாடு' நடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர், சொல்லாற்றலில் தன்னேரில் லாத தரமுடையவர். அவர், வருங்காலத் தமிழர்களும் 'தாய் மொழி' என்னும் அமுதத்தை விட்டு எஞ்ஞான்றும் அகலாத வண்ணம் திட்டங்கள் தீட்டி, திசைகளெல்லாம் தமிழ் முழக் கம் செய்திடும் நிலையை நிச்சயம் உருவாக்கித் தருவார் என் றெதிர் பார்த்து, அப்போதைக்கிப்போதே வாழ்த்துகின் றோம். வாழ்க தமிழ்! வெல்க தமிழினம்!

◆